# தொழுகையின் ஷர்த்துக்கள்

பாடம் 13

இபாதத்துக்கள் நிறைவேறுவதற்கு நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளை ஷர்த்து என்று சொல்கின்றோம். தொழுகையின் ஷர்த்துக்கள் என்றால், தொழுபவரிடம் காணப்பட வேண்டிய நிபந்தனைகளாகும். அவை பத்தாகும். அவற்றை இங்கே கவனியுங்கள்.

1. முஸ்லிமாயிருத்தல்.
2. நல்லதையும் கெட்டதையும் விளங்கும் பருவம் அடைதல். (தம்யீஸ்)
3. தொடக்கை விட்டும் நீங்கியிருத்தல்.
4. உடல், உடை, தொழுமிடம் என்பவற்றில் நஜிஸ் இல்லாதிருத்தல்.
5. உடலின் மறைக்க வேண்டிய பகுதியை (அவ்ரத்தை) மறைத்திருத்தல்.
6. கிப்லாவை முன்னோக்கி இருத்தல்.
7. தொழுகைக்குரிய சரியான நேரத்தை அறிந்திருத்தல்.
8. தொழும் முறையை அறிந்திருத்தல்.
9. தாம் தொழும் தொழுகை, பர்ளா ஸுன்னத்தா என்பதை அறிந்திருத்தல்.
10. தொழுகையின் பர்ளுகளையும் ஸுன்னத்துக்களையும் தனித்தனியாக அறிந்திருத்தல்.

ஆகவே, நாம் மேலே குறிப்பிட்ட தொழுகையின் ஷர்த்துக்களை நிறைவு செய்து கொள்ள வேண்டும்.

உடல், உடை, இடம் முதலியவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதோடு, அவ்ரத்தையும் மறைத்துக் கொள்ள வேண்டும். கிப்லாவின் திசையையும் தொழும் முறையையும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் எமது தொழுகை நிறைவேறும்.

**நிதமும் தொழுது இறையருள் பெறுவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புங்கள்.**

1. தொழுகையை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகள் ................................ எனப்படுகின்றன.
2. .......................... இருத்தல் தொழுகையின் முதலாவது ஷர்த்து ஆகும்.
3. தொழும்போது சுத்தமாக இருக்க வேண்டியவை .................. .................... ஆகிய மூன்றும் ஆகும்.
4. உடலில் கட்டாயமாக மறைக்க வேண்டிய பகுதி .................... எனப்படும்.
5. .................. என்பது கஃபதுல்லா அமைந்துள்ள திசை ஆகும்.